**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம் நாள் சனிக்கிழமை**
**அசல் வழக்கு எண் – 98/2009**
**CNR No:TNAL050000372019**

சதாசிவம் – வாதி

/எதிர்/

1. வேலாயுதம்,
2. கலா
3. ராஜசேகர்
4. ராஜேஸ்வரி
5. கோகிலம்
6. பாலசுப்ரமணியன்
7. சித்ரா – பிரதிவாதிகள்

தாவா சொத்தில் வாதிக்குரிய பொதுபாதை பாத்தியத்தை விளம்புகை செய்தும், அதன் தொடர்பரிகாரமாக வாதி தனது வீடு மற்றும் தோட்டத்திற்கு நடந்து செல்லவும், தாவா சொத்திலிருந்து வாதியின் மேல்கூரையை பழுது பார்க்கவும், ஓடு மாற்றவும், தாவா சொத்தினுள் வாதி புழங்கி வருவதையும் பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, அல்லது ஏஜண்டுகளோ எவ்வித்திலும் இடைஞ்சல் செய்யாமலிக்க வேண்டி நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத் தொகை வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவும், இன்னும் கோர்ட்டார் அவர்களுக்கு தம்யுக்தமாக தோன்றும் இதர நியாய பரிகாரங்கள் வழங்கியும் தீர்ப்பு செய்ய வேண்டுமாய் வாதி தரப்பில் பிரார்த்திக்கப்படுகிறது.

இவ்வழக்கானது 13.10.2023–அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சண்முகநாதன் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**தீர்ப்புரை**

வாதி அழைத்தும் ஆஜரில்லை. வாதியின் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். நீண்டகாலமாக விசாரணை பட்டியல் நிலுவையிலிருந்து வருகிறது. இந்நிலையில் வாதியின் வருகை அவசியமாகிறது மற்றும் இவ்வழக்கு நீண்ட நாட்கள் நிலுவையில் இருக்கும் வழக்குகளின் கீழ் வருகிறது. வாதி தனது தரப்பு விசாரணையை தொடங்க முன்வரவில்லை. எனவே, நீதியின் நலன் கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/– திரு.ச.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**வாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

–இல்லை–

**பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

–இல்லை–

ஒப்பம்/– திரு.ச.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

---

கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், ஜெயங்கொண்டம்
அசல் வழக்கு எண்.98/2009
தீர்ப்புரை (நேரிய/வரைவு)
நாள்: 13.10.2023

---